DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**CC.No. 208/2016**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | Pw 2 | Caste | : | |
| Name | : | பிரான்சிஸ் மேரி | Age | : | |
| FN. | : | | Occupation | : | தலைமை ஆசிரியர் |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 14th day of December 2022.
14.12.2022.

குறுக்கு விசாரணை

**1.** நான் தற்போது பிரப்பன் வலசை அரசு நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்வதற்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். எனது மேல் அதிகாரிகள் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிப்பதற்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் ஜெரோம் தான் என்னை சாட்சி சொல்ல கூப்பிட்டு வந்தார் என்றால் சரிதான்.ஜெரோம் எனக்கு உறவினர் என்றால் இல்லை.

2. நான் இராமேஸ்வரம் ரோடு பள்ளியில் எத்தனை ஆண்டுகளாக பணிபுரிந்தேன் என்றால் 3 ஆண்டுகள் 2014 முதல் 2017 வரை. பள்ளியில் சார்பு அமைப்புகளான VEC, SMC, PTA ஆகிய அமைப்புகள் உள்ளது என்றால் சரிதான். பள்ளியை சுற்றிய கிராமங்களில் மாணவர்களின் பெற்றோர்கள் தான் அந்த அமைப்புகளில் இருப்பார்கள். பள்ளியில் ஆசிரியர் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் பிரச்சனைகள் ஏற்படும் போது மேற்படி அமைப்புகள் மூலம் சரி செய்து கெள்வது வழக்கம் என்றால் சரிதான். இந்த அமைப்புகள் சார்பாக 12.06.2015-ம் தேதி AEO, DEO விற்கு புகார் ஒன்று அனுப்பட்டது என்றால் சரிதான்.என்னிடம் காட்டப்படுவது தான் அந்த புகார் என்றால் சரிதான். அது எ.ம.சா.ஆ-3 ஆகும். அதில் பொருள் காலத்தில் மண்டபம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, இராமேஸ்வரம் ரோடு பள்ளியில், பட்டதாரி ஆசிரியர் திரு.ஜெரோம் என்பவரின் தகாத செயல்களால் பள்ளியில் கல்வி மற்றும் வளர்ச்சி பாதிக்கப்படுவது தொடர்பாக என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மொத்தம் 11 புகார்கள் மாவட்ட தொடக்க கல்வி அலுவலருக்கு அனுப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் நிகழ்வு 11 ல் 5-ம்

வகுப்பிற்கு ஆசிரியர் இல்லாததால் அது சம்பந்தமாக AEO உத்தரவு போட்டு புகார்தாரர் அதை மறுத்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனோடு புகார்தாரரும், ஆசிரியை ஜமீலாவும் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுப்பதாக சொன்னதால் நிறுத்திவைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் நிகழ்வு 3-ல் பள்ளி வேலை நேரத்தில் அடிக்கடி பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் செல்போனில் பேசியது குறித்து தலைமை ஆசிரியர் கண்டித்ததால் ஏற்பட்ட பிரச்சனை குறித்து பேசி தீர்க்கப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அதேபோல் நிகழ்வு 5-ல் பள்ளியில் படித்த நம்பீஸ்வரி என்ற மாணவியை பல கோணங்களில் புகைபடம் எடுத்து கம்பியூட்டரில் வைத்ததற்கு அந்த மாணவியின் பெற்றோர் வந்து கண்டித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதுபோல் நடக்கவில்லை. அதேபோல் நிகழ்வு 5-ல் பள்ளியில் 6-ம் வகுப்பில் படித்த பாண்டீஸ்வரி என்ற மாணவிக்கு புகார்தாரர் தலையில் பேன் பார்த்ததால் அவரது பெற்றோர்கள் வந்து சத்தம் போட்டு பிரச்சனை செய்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

3. நான் வேலை பார்க்கும் போது கல்வி குழு தலைவராக பஞ்சவர்ணம் இருந்தார். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ-3 ஆவணத்தில் பள்ளி குழு தலைவர் பஞ்சவர்ணம் தான் கையெழுத்து செய்து சீல் வைத்தார். நிகழ்வு 6-ல் பள்ளி நேரத்தில் செல்போனில் மூலம் பாட்டு கேட்டுக்கொண்டிருந்தது சம்பந்தமாக தலைமை ஆசிரியர் கணேசன், ஜெரோமிடம் கேட்டு பிரச்சனை தீர்த்துக்கொள்ளப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் ஜெரோம் வழக்கு தாக்கல் செய்வதற்கு மற்றும் வழக்குளில் ஆஜராவதற்கு எழுத்து பூர்வமாக அனுமதி என்னிடமோ, AEO விடமோ வாங்கினாரா என்றால் அனுமதி வாங்கவில்லை. இராமேஸ்வரம் ரோடு பள்ளியில் 2018-ம் வருடத்தில் தலைமை ஆசிரியராக சார்லஸ் வேலை பார்த்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

4. நானும், ஜெரோமும் ஒரே மதத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நாகசுந்தரம் என்னிடம் எதுவும் புகார் மனு அனுப்பவில்லை என்றால் சரிதான்.அவர் என்ன புகார் மனு அனுப்பினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் AEO விடம் இருந்து வரப்பெற்ற உத்தரவை பெற்று ஜெரோம் என்பவரிடம் விளக்கம் பெற்று என் மூலமாக AEO விற்கு அனுப்பினேன் என்றால் சரிதான்.மற்ற படி இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.